பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**18 08 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆதார் பதிவில் இரண்டு கோடிக்கும் அதிகமான பள்ளிக் குழந்தைகளுக்கு பயோ மெட்ரிக் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக தனித்துவ அடையாள ஆணையம் கூறியுள்ளது.
2. தில்லி மாணவர்கள் போராட்டத்தின்போது காவல்துறையினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் புகார்கள் குறித்து ஆய்வு செய்ய உயர் அதிகாரம் கொண்ட குழு அமைக்கப்படும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.
3. அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள 14 அம்சங்களும் முழுமையாக நிறைவேற்றப்படும் வரை **Hormuz** நீரிணையை மூடுவதாக ஈரான் அறிவித்துள்ளது.
4. 2025-ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
5. இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டநேர இறுதியில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 84 ரன் எடுத்துள்ளது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>>>

ஆதார் பதிவில் இரண்டு கோடிக்கும் அதிகமான பள்ளிக் குழந்தைகளுக்கு பயோ மெட்ரிக் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக தனித்துவ அடையாள ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த செப்டம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்து **56** ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் ஆதார் விவரங்கள் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைளின் கை விரல்ரேகை பதிவு, கருவிழி மற்றும் சமீபத்திய புகைப்படம் உள்ளிட்ட விவரங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இதன்மூலம், குழந்தைகள் இனி தங்களுக்கு **15** வயதாகும்போது ஆதார் விவரங்களை புதுப்பித்தால் போதும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதார் விவரங்கள் புதுப்பிக்கப்பட்டிருப்பதன் மூலம், பள்ளி குழந்தைகள் அரசின் நலத்திட்ட உதவிகளை பெறவும், போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்கும் உதவிகரமாக இருக்கும் என்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

தில்லியில் மாணவர்கள் நடத்திய போராட்டத்தின்போது காவல்துறையினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் புகார்கள் குறித்து ஆய்வு செய்ய ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி, உயர்நீதிமன்ற நீதிபதி, முன்னாள் காவல்துறை தலைவர், முன்னாள் சிபிஐ இயக்குநர் ஆகியோர் அடங்கிய உயர் அதிகாரமிக்க குழு அமைக்கப்படும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், நீதிபதிகள் ஜாய் மால்யா பக்ஷி, திருமதி வி மோகனா ஆகியோர் கொண்ட பெஞ்ச், அரசு மற்றும் இதர தரப்பினரிடம் கருத்துகளை கேட்டபின், நாளை இந்த குழுவில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களின் பட்டியல் வெளியிடப்படும் என்று கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

நாகாலாந்து மாநிலம் **Dimapur — Dergaon** இடையேயான குழாய்வழி எரிவாயு விநியோகத் திட்டம் தொடங்கப்பட்டிருப்பதன் மூலம், அம்மாநிலம் வடகிழக்கு மற்றும் தேசிய எரிவாயு தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இத்திட்டம் வடகிழக்கு மாநிலங்களை நாட்டின் வளர்ச்சி இயந்திரமாக மாற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் எரிவாயு சார்ந்த பொருளாதார வளர்ச்சி வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு பேரூதவியாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த இணைப்பு மூலம் **Jorhat-**லிருந்து தினந்தோறும் ஒரு லட்சம் கனமீட்டருக்கும் அதிகமான எரிவாயு பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்படுவதுடன், ஆண்டுதோறும் பல நூறு கோடி ரூபாய் வருவாய் ஈட்டித்தரும் என்றும் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

பாதுகாப்புத்துறைக்கு தேவையான இலகுரக போர் விமானம், இலகுரக ஹெலிகாப்டர்கள், ரேடார், செயற்கைக்கோள், தகவல் தொடர்பு சாதனங்கள் உள்ளிட்ட **405** முக்கிய உபகரணங்கள் இனி உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் என்று பாதுகாப்பு தளவாட உற்பத்தித்துறை தெரிவித்துள்ளது.

இந்த தளவாடங்களின் பட்டியலை வெளியிட்டுள்ள அத்துறை, இதன் விவரம் **srijandefence.gov.in** என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம்.

இதில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு சாதனத்திற்கும் உள்நாட்டு உற்பத்திக்கான உத்தேச காலக்கெடுவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் சுயசார்பை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்துறை கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

பிரதமரின் மூன்று கோடி பெண்களை லட்சாதிபதியாக்கும் தொலைநோக்குத் திட்டம் நிறைவேற்றப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் **Baran**—ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், மாநிலத்தில் பெண்கள் சுயவேலைவாய்ப்பு பெறுவதற்கு மத்திய அரசு **13** ஆயிரத்து **461** கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளதாக தெரிவித்தார்.

பெண்களுக்கான அதிகாரம் ராஜஸ்தானில் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், **Rajeevika** திட்டத்தின்கீழ், **32** லட்சம் பெண் தொழில் முனைவோர் லட்சாதிபதியாக உயர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரதமரின் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், கிராமப்புற பொருளாதாரம் மேம்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகளுக்கு தேவையான பயிர்க்கடன்கள் மாநிலத்தில் தடையின்றி வழங்கப்பட்டு வருவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள **14** அம்சங்களும் முழுமையாக நிறைவேற்றப்படும் வரை **Hormuz** நீரிணையை மூடுவதாக ஈரான் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்நாடு வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், **Hormuz** நீரிணைப்பகுதியில் போக்குவரத்து தொடர்பாக எந்தவொரு உத்தரவையும் வெளிநாடுகள் பிறப்பிப்பதற்கு உரிமை இல்லை என்றும் கூறியுள்ளது.

ஈரான் மீது விதிக்கப்படும் தடைகளுக்கு எதிராக போராட தாங்கள் தயாராக இருப்பதாக அந்நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர் திரு முகமது **Mohammed Ghalibaf** கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

இந்தோனேஷியாவின் வடக்கு சுமத்ரா மாகாணத்தில் உள்ள நியாஸ் தீவில் இன்று கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் **6** புள்ளி ஒன்றாக பதிவாகியுள்ளது.

தெற்கு நியாஸ்தீவின் தென்கிழக்கே **147** கிலோமீட்டர் தொலைவில் கடலுக்கு அடியில் **29** கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டின் புவி இயற்பியல் ஆய்வு முகமை தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் பெரிய அளவில் சேதமோ, உயிரிழப்போ இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

பாகிஸ்தானில் சிறையில் உள்ள முன்னாள் பிரதமர் திரு இம்ரான்கானை மருத்துவ சிகிச்சைக்காக இஸ்லாமாபாதில் உள்ள **Shifa** மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அந்நாட்டு உச்சநீதிமன்றம், அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரித்த மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, இம்ரான்கானின் உடல்நிலையை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கிலும், மருத்துவ சிகிச்சையை அவர் தடையின்றி பெற வேண்டும் என்ற நோக்கிலும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக தெரிவித்தனர்.

அரசியல் சாசன ரீதியாக திரு இம்ரான்கானுக்கு உள்ள உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று பாகிஸ்தான் உச்சநீதிமன்றம், அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>>

சட்டீஸ்கர் மாநிலத்தில் மலைவாழ் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் கல்வி வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி, மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர், கல்வி கற்றதன் மூலம், நக்சலைட்டுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — விஜய்குமார் - 57 Sec. )***

<<<<<<<>>>>>>>

**2025**-ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான அர்ஜுனா விருதுக்கு பேட்மிண்டன் வீராங்கனைகள் **Treesa Jolly, Gayatri Gopichand** உள்ளிட்ட **17** பேருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதுபெரும் கால்பந்து வீரரான அருமை நாயகம் வாழ்நாள் சாதனைக்கான அர்ஜுனா விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தடகள பயிற்சியாளர் பர்வீர் சிங், குத்துச்சண்டை பயிற்சியாளர் சோட்டேலால் யாதவ், துப்பாக்கிச்சுடும் பயிற்சியாளர் நேகா நந்தகுமார் சவான் ஆகிய மூவருக்கு துரோணாச்சாரியார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

மல்யுத்த வீரர் வீரேந்தர் குமார், குத்துச்சண்டை வீரர் தர்மேந்திர சிங் யாதவ் ஆகியோர் வாழ்நாள் சாதனைக்கான விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

விளையாட்டு மேம்பாட்டிற்காக பாடுபட்ட அமைப்பிற்கான ராஷ்ட்ரிய கேல் புரஷ்கார் விருது புனேயை சேர்ந்த ராணுவ பாராலிம்பிக் பிரிவுக்கு வழங்கப்பட உள்ளது.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Galle**-யில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் **4** விக்கெட் இழப்பிற்கு **84** ரன் எடுத்துள்ளது.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சேப்பாக் அணி - கோவை அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற கோவை அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

<<<<<<<**END**>>>>>>>